
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1156

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிபுல்லா

57

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# தி.மு.க.வும் முஸ்லிம்களும் - இணைபிரியாத இருவழிப் பந்தம்!

திராவிட மாடல் 2.0 ஆட்சியின் நுழைவு வாயிலில் நிற்கிறோம். தி.மு.க. கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, எஸ்.டி.பி.ஐ., மனிதநேய ஜனநாயக கட்சி என 4 இஸ்லாமிய கட்சிகளுக்கு 6 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தி.மு.க. சார்பிலும் 4 இஸ்லாமிய வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். ஆனால் மறுமுனையில், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க., ஒரேயொரு இஸ்லாமிய வேட்பாளரை மட்டுமே அறிவித்திருக்கிறது. அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கவும் எந்த இஸ்லாமிய கட்சியும் முன்வரவில்லை.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முந்தைய 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில், அரசியல்ரீதியாகவும் சரி, திட்டங்கள் என்றாலும் சரி, இஸ்லாமிய சமூகம் பெருமளவு வஞ்சிக்கப்படுவதே நடந்தது. குறிப்பாக, காஷ்மீர் விவகாரம், குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு என முக்கியமான விவகாரங்கள் அனைத்திலும் இஸ்லாமியர்கள் பக்கம் நின்று, அவர்களுக்கான பாதுகாப்பு உணர்வைத் தர அ.தி.மு.க. தவறியது. ஆனால், எதிர்க்கட்சியாக இருந்தபோதிலும் சரி, ஆளுங்கட்சியான பின்பும் சரி, இஸ்லாமியர்களின் பாதுகாப்பு சார்ந்தும் வளர்ச்சி சார்ந்தும் உறுதியோடு நின்றது திராவிட முன்னேற்றக் கழகம்.

2021-இல் ஆட்சிக்கு வந்தவுடன், குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியது திராவிட முன்னேற்றக் கழகம். கர்நாடகாவில் ஹிஜாப் சர்ச்சை எழுந்தபோது, அதனால் இஸ்லாமிய மாணவிகளின் பாதுகாப்புச் சூழல் தகர்ந்தபோது, எங்கோ நடக்கிறது என அமைதிகொள்ளாமல், சங் பரிவார்களின் அத்தகைய அநியாயச் செயல்களைக் கண்டித்தது கழகம். உத்தரப்பிரதேசத்தில் புல்டோசர் கொண்டு இஸ்லாமியர்களின் வீடுகள் தகர்க்கப்பட்டபோது, வடக்கில் இருந்து எத்தனை கட்சிகள் குரல் எழுப்பினவோ தெரியவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் இருந்து குரல் கொடுத்தது கழகம். மத அடிப்படையிலான வெறுப்புரைகள் மற்றும் தாக்குதல்கள் குறித்து தி.மு.க. தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்தது. முஸ்லிம் மாணவர்களுக்கான உதவித்தொகைகளை நிறுத்தி, அவர்களின் கல்வி வாய்ப்புகளைச் சிதைக்கக் கூடாது எனத் தொடர்ந்து குரல்கொடுத்தது கழகம். ஆனால், இதில் எதைப் பற்றியுமே கவலைகொள்ளாமல் கடந்து சென்று, அ.தி.மு.க. கள்ள மௌனம்தான் சாதித்தது.

அதே போல ஆட்சிரீதியாகவும், எண்ணற்ற பல திட்டங்களை இஸ்லாமியர்கள் நலனுக்காக ஐந்து ஆண்டுகளில் தீட்டியிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம். தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 31,625 பயனாளிகளுக்கு ரூ.207 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்காக சென்னை நங்கநல்லூரில், ரூ.65 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் அமைத்து வருகிறது, திராவிட மாடல் அரசு. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியமாக ரூ.80 இலட்சம் உயர்த்தி வழங்கப்பட்டுவருகிறது. பயனாளி ஒருவருக்கு ரூ.25,000 வீதம் ஹஜ் மானியம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 11,364 ஹஜ் பயனாளிகள் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதற்காக அரசு ரூ.24.56 கோடி மானியமாக வழங்கியுள்ளது. சிறுபான்மையினரின் பல்வேறு நலத் திட்டங்களுக்கு, கடந்த 4 ஆண்டுகளில் ரூபாய் 405 கோடி அளவில் அரசு நிதி செலவிடப்பட்டுள்ளது.




### 2.0 வாக்குறுதிகள்

ஆட்சியிலும் சரி, அரசியல் தளத்திலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் சிறுபான்மையினரின் நல்வாழ்வுக்காகக் கொடுத்த அக்கறையும், கண்டுகொள்ளாமல் விட்ட அ.தி.மு.க. அலட்சியமும்தான் கூட்டணி விவகாரத்திலும் வெளிப்பட்டு, அ.தி.மு.க. சிறுபான்மை சமூகத்தால் தனித்து விடப்பட்டிருக்கிறது. சிறுபான்மை சமூகத்தை தி.மு.க. தாங்கி நிற்பதுபோல, சிறுபான்மை சமூகமும் தி.மு.க.வை தாங்கி நிற்கிறது. இந்த இருவழிப் பந்தம் நீடிக்கும் என்ற அக்கறையின் வெளிப்பாடாகத்தான், திராவிட மாடல் 2.0 ஆட்சியின் தேர்தல் அறிக்கையும் அமைந்திருக்கிறது. 2.0 ஆட்சியின் செயல்திட்ட அறிக்கையாக வெளிவந்துள்ள இந்த ஆவணத்தில், 10 மிக முக்கிய வாக்குறுதிகளைச் சிறுபான்மையினருக்காக அளித்திருக்கிறார், திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

> ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் சிறுபான்மையினருக்கான அறிவிப்புகளையும் ஆக்கபூர்வ திட்டங்களையும் தந்து கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

‘சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் மாவட்டங்களில், திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும். சிறுபான்மை சமூகத்தினர் வணிகம் மற்றும் தொழில் தொடங்க கடன் பெறும் சிறுபான்மை இளைஞர்கள், இளம்பெண்கள் ஆகியோருக்கு சிறப்புத் திறன் பயிற்சி வகுப்புகள் துவங்கப்படும். ஆண்டுக்கு 25,000 இளைஞர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படும். இஸ்லாமிய மக்களின் அடக்கத்தலங்களுக்கு இயன்ற இடங்களில் இடம் ஒதுக்கப்படும். சிறுபான்மை பள்ளிகளில் காலியாக உள்ள அரபி ஆசிரியப் பணியிடங்கள் நிரப்பப்படும். இஸ்லாமியப் பெண்களின் கல்வியை ஊக்குவிக்க, வக்ஃபு வாரியத்தின் வாயிலாகக் கூடுதல் கல்லூரிகள் திறக்கப்படும். சிறுபான்மையினர் அயலக பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெறுவதை உறுதிசெய்ய, ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்படும்.

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு சிறுபான்மையினருக்கும் ஒரு புதிய திட்டம் உருவாக்கப்படும். சிறுபான்மையினர் தொழில் தொடங்க, டாம்கோ மூலம் கடன் பெறும் உச்சவரம்பின் அளவு ரூ. 30 இலட்சமாக உயர்த்தப்படும். பள்ளிவாசல் மற்றும் தேவாலயங்களில் விரிவாக்கம், பராமரித்தல் அல்லது புதுப்பித்துக் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் தடையில்லாச் சான்றிதழ் பெறுவதை முறையாகவும் விரைவாகவும் செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள உருது ஆசிரியர் பணியிடங்கள், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விரைந்து நிரப்பப்படும்’ என முஸ்லிம் சமூகத்தின் சமகால தேவைகளைக் கேட்டறிந்து, வாக்குறுதியாகக் கொடுத்திருக்கிறது கழகம். ஆனால், அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் சிறுபான்மையினர் நலன் என்ற தனிப் பத்தியும் இல்லை; சிறுபான்மையினர் நலனுக்கான முக்கிய வாக்குறுதிகளும் இல்லை. ‘சிறுபான்மையினர் தொழில் தொடங்க வட்டியில்லா கடன் வழங்குவோம்’ என்ற ஒற்றை வரியைத் தவிர, சிறுபான்மையினர் நலனுக்கான எந்த வாக்குறுதியும் அ.தி.மு.க.வால் வழங்கப்படவில்லை. சிறுபான்மையினரின் வாக்குகள் தங்களுக்கு கிடைக்கப்போவதில்லை என்று கருதி, அ.தி.மு.க. வாக்குறுதியில்கூட இஸ்லாமியர்களைக் கைகழுவிவிட்டது போலும்.

### காலந்தோறும் கழகத்தின் ஆதரவு

சிறுபான்மையினருக்கான வாக்குறுதிகளை திராவிட முன்னேற்றக் கழகம் கொடுப்பது இன்று புதிதாக உதித்த சிந்தனையல்ல. தி.மு.கழகம் முதன்முதலாக எதிர்க்கட்சியாக அமர்ந்த 1962 தேர்தலிலேயே, ‘சிறுபான்மையினராக உள்ள முஸ்லிம், கிறித்துவர் எனும் மக்களுடைய குறைகளைப் போக்க, அவர்களது உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களது முன்னேற்றத்துக்கும் கழகம் பாடுபடும்’ என்ற வாக்குறுதியை அளித்தார் பேரறிஞர் அண்ணா. அதன் தொடர்ச்சியாக, ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் ஒவ்வொரு ஆட்சியிலும் சிறுபான்மையினருக்கான அறிவிப்புகளையும் ஆக்கபூர்வ திட்டங்களையும் தந்துகொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். அதனால்தான் அன்றிலிருந்து இன்றுவரை இணை பிரியாமல் தொடர்கிறது அந்த இருவழிப் பந்தம்.

...நீளும்

## பெண்களின் பொருளாதார அதிகாரத்தில் மாபெரும் புரட்சி!

பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்க வேண்டுமென்று 1929-இல் செங்கல்பட்டு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினார் தந்தை பெரியார். பெரியாரின் கனவை நனவாக்கும் வகையில், பெண்களுக்குத் தந்தை சொத்தில் சம உரிமை வழங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை 1989-இல் நிறைவேற்றினார் கலைஞர். இன்றைக்குப் பெண்கள் சொத்துரிமை பெறுவதில் ஒரு மாபெரும் புரட்சியையே நிகழ்த்தியிருக்கிறார், திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இதுதொடர்பாகப் பதிவிட்டுள்ள அரசியல் விமர்சகர் விக்னேஷ் ஆனந்த், ‘சமூக நீதி, சமத்துவம் மற்றும் சுயமரியாதை ஆகிய தூண்களின் மேல் எழுப்பப்பட்டதுதான் திராவிட இயக்கம். அந்தப் பாதையில் பயணிக்கும் தற்போதைய தமிழ்நாடு அரசு, ‘பெண்களுக்குச் சொத்துரிமை’ என்பதை வெறும் சட்டமாக மட்டும் பார்க்காமல், அதை எளிய மக்களும் பயன்படுத்தும் வகையில் சலுகைகளையும் வழங்கிவருகிறது. பெண்கள் பெயரில் சொத்து வாங்குவதை ஊக்குவிக்க, பதிவுக் கட்டணத்தில் 1 சதவிகித சலுகையை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பொதுவாக, 4 சதவிகிதமாக இருக்கும் பதிவுக் கட்டணம், பெண்களுக்கு 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. ரூ.10 லட்சம் வரையிலான சொத்துகளுக்கு இந்தச் சலுகை வழங்கப்படுவது, நடுத்தர மற்றும் ஏழை, எளிய குடும்பத்துப் பெண்கள், தங்கள் பெயரில் ஒரு செண்ட் நிலமாவது கொண்டிருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டது.

இந்தியச் சமூக அமைப்பில் காலம் காலமாகச் சொத்துகள் ஆண்கள் பெயரிலேயே இருந்து வந்துள்ளன. ஆனால், திராவிட மாடல் அரசு, இந்த மரபை உடைக்க விரும்புகிறது. ஒரு குடும்பத்தின் சொத்து பெண் பெயரில் இருக்கும்போது, அந்தப் பெண்ணின் சமூக அந்தஸ்து உயர்கிறது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இதுவரை 3 இலட்சத்து 71 ஆயிரத்து 705 பெண்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தி சொத்துகளைத் தங்கள் பெயரில் பதிவு செய்துள்ளனர். குறுகிய காலத்திற்குள் இத்தனை இலட்சம் பெண்கள் சொத்துக்கு உரிமையாளர்களாக மாறியிருப்பது, திராவிட மாடல் அரசு பெண்களின் பொருளாதார அதிகாரத்தில் ஏற்படுத்தியுள்ள மாபெரும் புரட்சியாகும்’ என்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்





நேரு பிரபாகரன்

### தலைவரிடம் பிறந்தநாள் வாழ்த்து!

2013-ஆம் ஆண்டு, நவம்பர் 9-ஆம் தேதி, எனது பிறந்தநாளை முன்னிட்டு அண்ணா அறிவாலயத்தில் அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். எங்களுடன் புகைப்படக் கலைஞரையும் அழைத்துச் சென்றிருந்தோம். படம் எடுத்தபோது, “இந்த ஆங்கில்ல எடுங்க தம்பி” எனக் கழகத் தலைவர் கூறியபோது நெகிழ்ச்சியாக இருந்தது.

- நேரு பிரபாகரன், வழக்கறிஞர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கழகமே திராவிடக் கட்சி!

1957-ஆம் ஆண்டு, கழகம் முதன்முதலில் தேர்தலைச் சந்திப்பதற்கு முன், 1956-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில், சென்னையில் மாணவர் மன்ற நிகழ்ச்சியில் கழகத்தின் தேர்தல் திட்டம் குறித்துப் பேசினார் பேரறிஞர் அண்ணா. “தேர்தலில் நிற்பதற்கு நமக்கு நல்ல அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, தி.மு.கழகம் மட்டும்தான் திராவிட நாட்டிற்கே சொந்தமான கட்சி. கழகத்தின் திட்டங்கள் தீட்டப்படுவது இங்கு. கொள்கைகள் வரையறுக்கப்படுவது இங்கு. ஆனால், வேறு எந்தக் கட்சிக்கும் இந்த நிலை கிடையாது” என்றார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.